# ச்சோஸென் ஜெனெரேஷன்

# CHOSEN GENERATION

(Tamil - Monthly Magazine)

செடி : 10 மலர் : 7 Plant : 10 Flower 7 மே 2025 May 2025

ஆண்டு சந்தா ரூ.50/- Annual Subscription Rs.50/- தனிபிரதி விலை ரூ.5/-



அவசர ஜெப உதவிக்கு

ஊழியரிடம் எந்த நேரத்திலும் நேரிடையாக தொடர்பு கொள்ள மொபைல் போன் எண்:

94433-46119

# ஆசிரியரின் மனம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு,

உயிர்த்தெழுந்த நம் ஆண்வடராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் கூறி எழுதும் மடல். நாங்கள் நலம். அதுபோலவே பத்திரிகை வாசகர்களாகிய நீங்களும் நலமுடன் இருப்பீர்கள் என கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

கர்த்தருக்குள் அன்பானவர்களே இந்த வருடம் துவங்கி 4 மாதங்களையும் கடந்து விட்டோம். இந்த புதிய மாத்திலும் உங்களை சந்திக்க தேவன் கொடுத்த வாய்ப்புக்காக அவருக்கு என் நன்றிகளை தெரிவிக்கிறேன். நீங்கள் அனுப்புகிற ஒவ்வொரு ஜெபகுறிப்புகளுக்காக, நாங்கள் சபையாகவும், 'ஒரு மணி நேரம் ஊழியரோடு' என்ற ஜெபத்திலும், உபவாச கூட்டத்திலும் ஜெபித்து வருகிறோம். நீங்களும் இந்த CGA சபையின் ஊழியங்களுக்காக உங்களின் தனி ஜெபங்களில் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

சபை Pastor அவர்கள் நம்மை விட்டு போனாலும் பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு, இந்த சபையின் ஊழியங்கள் தடையில்லாமல் நடந்து கொண்டு வருகிறது.

"ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார். - யோபு 5:9" சபை மக்களுக்கு அநேக காரியங்களை தீர்க்க தரிசனத்தின் மூலமாகவும் பல காரியங்களையும் வெளிபடுத்தி வருகிறார். ஞாயிறு ஆராதனைகளில் சாட்சி சொல்லி தேவனின் நாமத்தை மகிமைப்படுத்துகிறார்கள்.

"என் கால் செம்மையான இடத்தில் நிற்கிறது சபைகளிலே நான் கர்த்தரை துதிப்பேன்." சங். 26:12 ன்படி சொல்கிறார்கள். எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடை விடாமல் ஜெபம் பண்ணுங்கள். I தெச. 5:16,17

மறுபடியும் உங்களை சந்திக்கும்வரை கர்த்தரின் கரம் உங்களுடன் இருப்பதாக.

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில் உங்களின் அன்பு சகோதரி

Sarah Vimal

(சாரா விமல்)

# “நீங்கள் எங்கே தேடுகிறீர்கள் ?”

இயேசுவானவர் மரித்துவிட்டார். அந்த கோரமான சிலுவையில், அவரை கன்மலையில் வெட்டப்பட்ட புதிதான கல்லறையில் வைத்தார்கள். அதன் வாசலை ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துவிட்டார்கள். (மத். 27:60)

ஓய்வு நாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில் மகதேலனா மரியாளும், மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். (மத். 28:1) தூதன் அந்த ஸ்தீரீகளை நோக்கி நீங்கள், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன்.

<u>அவர் இங்கே இல்லை;</u> தாம் சொன்னபடியே உயிர்த்து எழுந்தார். கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள் (மத். 28:5,6) பயப்படாதிருங்கள். சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவை தேடுகிறீர்கள். அவர் உயிர்த்தெழுந்தார். அவர் இங்கே இல்லை. இதோ அவரை வைத்த இடம். (மாற். 16:6)

அந்த ஸ்தீரிகள். அதிகாலையில் கல்லறையினிடத்தில் வந்தார்கள். கல்லறையில் இயேசுவின் சரீரத்தைக் காணாமல் மிகுந்த கலக்கமடைந்திருந்தார்கள். அப்பொழுது பிரகாசமுள்ள வஸ்திரம் தரித்த இரண்டு பேர், அவர்களிடம் நீங்கள் உயிரோடிருக்கிறவரை மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை. அவர் உயிர்த்தெழுந்தார் (லூக். 24:5,6)

## உயிரோடு இருக்கிறவர்

அந்த ஸ்தீரிகள் பயப்பட்டு தலைகவிழ்ந்து நிற்கும்போது தூதர்கள் அவர்களை நோக்கி, அவர் உயிரோடு இருக்கிறார். நீங்கள் இயேசுவை மரித்தவர்களிடம் தேடுகிறீர்களேஎன்றார். ஆம் பிரியமானவர்களே, நாமும் கூட சில நேரங்களில் ஆண்டவரை எங்கே தேடுவது என்று தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவர் நம்மோடுதான் இருக்கிறார். நம் இல்லத்தில் இருக்கிறார். நாம் போகிற இடத்தில் நம்மோடு வருகிறார். ஆனால் நாம் அவரை (இயேசுவை) அறியாதபடி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் (ஓசி. 1:10) தாவீது சொல்லும் போது என் ஆத்துமா, ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது உம் சந்திதியில் வந்து நிற்பேன். (சங். 42:2) இப்படிப்பட்ட அனுபவம் நமக்கு உண்டா?

## பெயர் சொல்லி அழைக்கிறார்

இயேசு அவளை நோக்கி மரியாளே என்றார். அவள் திரும்பி பார்த்து : "ரபூனி" என்றார். அதற்கு போதகரே என்று அர்த்தமாம் (யோவா 20:16) அவளுடைய பெயரை சொல்லி அழைத்த இயேசு, குழப்பத்தில், பயத்தில் இருக்கும்போதும், நம் பெயரை சொல்லி அழைக்கிறவர், நம் தேவன். மேலும் ஆயக்காரருக்குத் தலைவனாய் இருந்தவன் இயேசுவை பார்க்க ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். இயேசு அவனை கண்டு சகேயுவே என்று பெயர் சொல்லி அழைத்தார். அதோடு கூட அவன் வீட்டில் தங்கினார். அவன் தன்னை ஒப்பு கொடுத்தபோது இன்று இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது என்றார் (லூக். 19:9)

## ஆசீர்வதித்தார்

உயிர்த்தெழுந்த இயேசுவை அறிவிக்க மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் போகிறபோது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்பட்டு, வாழ்க என்றார் (மத். 28:9) இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்கு சொல்ல நாம் வெட்கப்படக்கூடாது. அவருடைய வார்த்தைகளை நாம் சொல்லும் போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

### நம்மை சகோதரர் என்றும் சொல்கிறார்

இயேசு மரியாளிடம், நீ என் சகோதரரிடத்துக்குப் போய் நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்க்கும், ஏறிப் போகிறேன் என்று சொல்லு என்றார். (யோவா. 20:17) அவர் சீஷர்கள் தம் சகோதரர் என்று சொந்தம் பாராட்டி சொல்வதை நாம் கவனிக்க வேண்டும். நாம் அவராலே உண்டாக்கப்பட்டிருக்கிறோம். அதினிமித்தம் அவர் நம்மை சகோதரர் என்று சொல்ல வெட்கப்படுவது இல்லை. அவருக்குள் நாம் விசுவாசமுள்ளவர்களாய் உறுதியாக இருக்க வேண்டும், (எபி 13:1)ம் வசனத்தில். சகோதர சிநேகம் நிலைத்திருக்ககடவது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இயேசு உயிர்த்தெழுந்து நமக்கு என்ன செய்தார் என்று பார்ப்போம்.

### சந்தேகங்களை நிவர்த்தி செய்தார்

இயேசு அவர்களை நோக்கி நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள். உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறது. என்ன நான்தான் என்று அறியும்படி என் கைககளையும், என் கால்களையும் பாருங்கள். என்னை தொட்டுப் பாருங்கள் எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே என்றார். (லூக். 24:38,39) ஒரு விசுவாசியின்

வாழ்க்கையில் சந்தேகம் வரும்போது, இருதயம் கடினப்பட்டு விடும். நிலையான காரியம் நடக்க தடையாக இருக்கும். சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிப்பட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாய் இருக்கிறார். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடம் எதையாகிலும் பெறலாம் என்று நினைக்க வேண்டாம். இருமனமுள்ளவன் தன் வழிகளில் எல்லாம் நிலையற்றவனாய் இருக்கிறான். (யாக். 1:6-8)

## பயத்தை நீக்குவார் (கினார்)

வாரத்தின் முதல் நாளாகிய அன்றைய தினம் சாயங்கால வேளையில் சீஷர்கள் கூடி இருந்த இடத்தில் யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில் இயேசு வந்து நடுவே நின்று உங்களுக்கு சமாதானம் என்றார். (யோவா 20:19). இந்த பயம் எப்போது வருகிறது. நாம் தேவனிடம் அன்பு செலுத்தாமல் நம் சொந்த விருப்பப்படி செய்யும்போதுதான். அன்பிலே பயம் இல்லை ; பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும். பயம் வேதனை உள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல. (I யோவா 4:18) எனவே பிரியமானவர்களே, இயேசு உயிருடன் எழுந்து நம் வாழ்க்கையில் காணப்படுகிற குறைகளை நீக்குகிறார். சமாதானம் கொடுக்கிறார். பெயர் சொல்லி அழைக்கிறார். அதோடு நமக்கு இருக்கும் சந்தேகங்களையும் நீக்கி, நம் நடுவில் இருந்து நம்மை தேற்றுகிறார். இப்படிப்பட்ட ஆண்டவரை இன்னும் அறியாமல் இருக்கிறோமா? சற்று யோசித்துப் பார்ப்போமாக.

## சரியாக நடத்துகிறார்

சீஷர்கள் மறுபடியும் இயேசுவை அறிந்து கொள்ளாமல் இருக்கும்போதும் விசுவாசியாமலும் இருக்கும் போதும் மறுபடியும் தம்மை வெளிப்படுத்துகிறார். பேதுருவும், மற்றவர்களும் இரவு வேளையில் கடலில் மீன் பிடிக்கச் சென்றார்கள். அந்த இராத்திரியில் அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. விடியற்காலமான போது, இயேசு கரையில் நின்றார். அவரை இயேசு என்று அறியாதிருந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி பிள்ளைகளே, புசிக்கிறதற்கு உங்களிடத்தில் ஏதாகிலும் உண்டா என்றார். ஒன்றும் இல்லை என்றார்கள். அவர் நீங்கள் வலதுபுறமாக வலையை போடுங்கள் என்று சொன்னபோது திரளான மீன்கள் அகப்படும்படி செய்தார். அவர்களை சரியாக நடத்தி அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார். அதோடல்லாமல் அவர்கள் களைத்து வந்தபோது, அப்பத்தையும், மீனையும் கொடுத்து அவர்களை போஷிக்கிறார். தேவன் நம்மையும்ஒன்றும் இல்லை என்று சொல்லாமல் எல்லாவற்றையும்

நிறைவாய் கொடுக்கிறவர். நம் வாழ்வில் உயிர்த்தெழுந்த இயேசு இன்னும் அற்புதங்களை செய்துக் கொண்டுதான் இருக்கிறார். நாம் அவரை முழுவதும் அறிந்துக் கொண்டு வாழ்க்கையில் முன்னேற. தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

விசுவாசிப்போம், ஆசீர்வாதங்களை பெறுவோம். ஆமென், அல்லேலூயா! .

## 2025 மே மாதத்திற்கான வாக்குத்தத்தம்

*...இனி நீ அழுது கொண்டிராய்; உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு அவர் உருக்கமாய் இரங்கி, அதை கேட்டவுடனே உனக்கு மறுஉத்தரவு அருளுவார்.*

(ஏசா. 30 : 19)

## ஆராதனை நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| காலை தியானம் | ஒவ்வொரு 1 ஆம் தேதி காலை 5 am – 6 am |
| பிரதி ஞாயிறு ஆராதனை | 9 am – 11.30 am |
| பிரதி செவ்வாய் | ஊழியருடன் ஒரு மணி நேர ஜெபம் 7.00 pm – 8.00 pm |
| பிரதி புதன் | வேதபாடக் கூட்டம் 7.30 pm – 8.30 pm |
| பிரதி வெள்ளி | சகோதரிகள் கூட்டம் 10.00 am – 12.00 noon |
| 2வது சனிக்கிழமை | உபவாசக் கூட்டம் 10.00 am – 2.00 pm |
| 3வது வெள்ளிக்கிழமை | முழு இரவு ஜெபம் 10.00 pm – 2.00 am |
| 4வது சனிக்கிழமை | காத்திருப்புக் கூட்டம் 7.00 pm – 8.30 pm |

## அவசர ஜெப உதவிக்கு

*"ஜெபக்குறிப்புகளை, கடிதங்களை அனுப்ப மற்றுமொரு வாய்ப்பு"*

E-Mail : pastorvictorvimalcga@gmail.com
sarahvimal28@gmail.com

 

# கண்டவைகளும் கேட்டவைகளும்

 

## ஜெப எண்ணெயின் மூலம் அதிசயம்

கர்த்தர் என் வயோதிப காலத்திலும் என்னை இதுவரையில் மாத்திரை மருந்துகள் எடுக்காமல் நடத்தி கொண்டு வருகிறார். கடந்த வாரத்தில் என்னுடைய மாடு ஒன்று செனயாய் இருக்கும் சூழ்நிலையில் திடீரென கீழே விழுந்து வாயில் இருந்து நுரை தள்ளிவிட்டது. அப்பொழுது நான் கதறினேன். என்னால் ஒன்றும் செய்ய முடியாது இயேசப்பா நீர்தான் இந்த மாட்டை சுகப்படுத்தி எழுந்து நிற்கும்படி செய்ய வேண்டும் என்று அழுது ஜெபித்து பாஸ்டர் அய்யா ஜெபித்துக் கொடுத்த எண்ணெயை எடுத்து மாட்டின் கால்களில் நெற்றியில் தேய்த்து, தண்ணீரில் ஜெப எண்ணெயை ஊற்றி அதின் வாயிலும் கொடுத்தேன். சிறது நேரத்தில் அந்த மாடு தானாகவே எழுந்து நின்றது. அழுகுரலை கேட்டு ஜெப எண்ணெய் மூலம் அற்புதம் செய்த தேவனுக்கு கோடான கோடி நன்றி சொல்லுகிறேன்.

சகோதரி. **பியூலா,** கணியம்பாடி.

## கண் பார்வையை தெளிவாக்கினார்

நான் Nursing ல் உயர்படிப்பு படித்துக் கொண்டிருக்கிறேன். கடந்த வாரம் எனக்கு Exam துவங்கினது. ஊழியருடன் ஒரு மணி நேரம் ஜெபத்தில் அதற்காக ஜெபிக்கும்படி pastor Aunty யிடம் கூறினேன். அவர்களும் ஜெபித்தார்கள். இரவு வேளைகளில் படித்துக் கொண்டிருப்பேன். பிற்பாடு நான் காலை Exam எழுதும்போது திடீரென என் கண்களில் பார்வை மங்கலானது. நான் எழுதுவது கூட எனக்கு சரியாக தெரியவில்லை. எப்படியோ சமாளித்து எழுதிவிட்டேன். இரண்டு நாட்களுக்கு முன்பாக இப்படியாய் இரவில் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு 11 மணியளவில் மறுபடியும் என் பார்வை குறைந்தது. உடனே நான் சகோதரி Jessica விடம் Phone செய்து ஜெபித்துக் கொண்டேன். உடனே என் பார்வை தெளிவாகி படித்தேன். நன்றாக Exam எழுதவும் கர்த்தர் கிருபை பாராட்டினார். இப்படியாய் அதிசயத்தை செய்த என் ஆண்டவரை துதிக்கிறேன்.

சகோதரி. **எப்சிபா,** வேலூர்.

## ஏழ்மையிலிருந்து உயர்த்தின கர்த்தர்

நான் இந்த சபைக்கு கடந்த பத்து வருடங்களாக வருகிறேன். முதல் முதலாக மே10, 2015 அன்று திருவிருந்து ஆராதனைக்கு வந்தேன். அப்போதிலிருந்து எனக்குள் ஏக்கம் இருந்தது. நானும் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். திருவிருந்தில் பங்கு கொள்ள வேண்டும் என்று. நான் கல்லூரி படிக்கும் போதிலிருந்து சபைக்கு வரகூட எனக்கு காசு இருக்காது. இலவச பேருந்தில் வந்து 10 ரூபாய் காணிக்கை செலுத்துவேன். ஒன்றன்பின் ஒன்றாக கர்த்தர் என்னையும், எங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்தார். வீடு கட்ட கிருபை செய்தார். வேலை கிடைக்க கிருபை செய்தார். இன்று அவருடைய நீதிக்கு கீழ்படிந்து மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கும்படி கிருபை செய்திருக்கிறார். நான் Police ல் வேலையில் உள்ளதால், என்னால் தொடர்ந்து தினமும் ஜெபிக்க முடியாமல், வேதம் வாசிக்க முடியாமல் இருந்தது. ஆனால் இன்று நான் சபைக்கு முன்பாக ஒரு உறுதி மொழி எடுத்துக் கொள்கிறேன். தொடர்ந்து தினமும் ஜெபித்து வேதம் வாசிப்பேன் என்று. எனக்காக ஜெபிக்கும் Pastor அம்மா மற்றும் குடும்பத்தாருக்கும் நன்றி சொல்கிறேன். ஆமென் ! அல்லேலுயா !

சகோதரர். **மோகன்ராஜ்,** கணியம்பாடி.

## தம்முடைய ஊழியக்காரருக்கு இரகசியத்தை வெளிப்படுத்துகிறார்

காலை தியான கூட்டத்தின்போது ஊழியக்கார அம்மாவோடு கர்த்தர் பேசி வெளிப்படுத்திய வண்ணம், இந்த ஏப்ரல் மாதத்தில் பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் குழந்தைகளை மிக கவனத்துடன் பார்த்துக் கொள்ளுங்கள் என்றும், குறிப்பாக 10 வயதிற்குட்பட்ட பிள்ளைகளை என்று அழுத்தமாக கூறினார்கள். அதே போல, என் சகோதரரின் 10 வயது பேத்தி, தன் தகப்பன் வரும் வேளையில் வழக்கம் போல கதவருகே நின்றுக் கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் ஒரு வாகனம், கட்டுப்பாட்டை இழந்து அதிவேகமாக வந்து, அந்த கதவின் மீது மோதியது. நல்வாய்ப்பாக அந்த குழந்தை அங்கிருந்து பாதுகாப்பாக வேறு இடத்தில் போய் நின்றாள். இல்லையென்றால் பெரும் அசம்பாவிதம் நிகழ்ந்திருக்கும். உடனே நான் பாஸ்டர் அம்மா மூலம் கர்த்தர் வெளிப்படுத்தின வார்த்தைகளை நினைத்து தேவனுக்கு நன்றி செலுத்தினேன். நமக்கு வரும் இன்னல்களை முன்கூட்டியே தம்முடைய ஊழியக்காரர்களுக்கு வெளிப்படுத்தும் தேவன். கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக.

சகோதரி. **ஸ்டெல்லா,** காந்திநகர்

**CGA Church Service and Live Streaming Schedules are given below in Indian Timings - IST**

Every Day Tamil Msg-Live Streaming - 7 am to 8 am & 7 pm to 8 pm

SUNDAY SERVICE (TAMIL) : Every Sunday - 9am to 11.30 am

BIBLE STUDY : Every Wednesday - 7.30 pm to 8.30 pm

FASTING & DIVINE HEALING MEETING :

2nd Saturday of every Month - 10.00 am to 2.30 pm

TARRYING MEETING :

4th Saturday of every Month - 7.30 pm to 8.30 pm

MORNING DEVOTION :

1st Day of the Month - 5.00 am to 6.00 am

**எனக்கன்பான பத்திரிகை வாசகர்களுக்கு**
**ஒரு அன்பான வேண்டுகோள்.**

நீங்கள் **M.O.** அனுப்ப விரும்பினால் **Mrs. Sarah Vimal** என்ற பெயரில் அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**Mrs. Sarah Vimal**
**Chosen Generation Assembly**
97, Church Street, Kamarajar 3rd Cross, Victor Lane,
Bagayam, Vellore - 632002.

Regd. under Newspaper RNI No.TNTAM/2015/66320 & Posting under / Book Pack of Containing Periodicals with RNI

# செய்திச் சிதறல்

1. இந்தியாவுடன் சேர்ந்து செயல்பட தயார் - சீனா அறிவிப்பு.
2. 88,859 வாகனங்களில் கியூ ஆர் குறியீடு - சென்னையில் பாதுகாப்பாக பயணிக்கலாம்.
3. அரசு பஸ்களில் பெண்களுக்கு இலவசம் ஜம்மு - காஷ்மீரிலும் அமலுக்கு வருகிறது.
4. தூர்வார ரூ.107 கோடி மட்டும் ஒதுக்கீடா? டெல்டா விவசாயிகள் குமுறல்.
5. தென்னையில் விதைக்காய் தேர்வு கல்லூரி மாணவர்கள் விளக்கம்.
6. உக்ரைனில் இந்திய மருந்து கிடங்கு சேதம்.
7. “தொழிலாளி டிரம்ப்...”. கேலி செய்யும் சீனர்கள்.
8. அணு-ஆயுத திட்டங்களை ஈரான் நிறுத்தி வைக்க வேண்டும். இதற்காக இருதரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.
9. ரூ.2,152 கோடி கல்வி நிதியை மத்திய அரசு விடுவிக்க வழக்கு. - சுப்ரீம் கோர்ட்டில் தொடுக்க தமிழக அரசு தீவிர பரிசலனை.
10. ஊடுருவியோருக்கு போலி வாக்காளர் அட்டை - வக்பு சட்டத்திருத்தம் விவகாரத்தில் புது சூடு.

Pl. Contact : **Rev. Dr. VICTOR VIMAL / Mrs. SARAH VIMAL**
CHOSEN GENERATION ASSEMBLY
P.O. Bag No. 208, CGA Church Street, (Otteri Post Office Street)
Victor Lane, Otteri, Vellore - 632 002.Tamil Nadu, S. India.

Owned and Published by Mrs. Sarah Vimal Published from
97, Church Street, Govindaraj Nagar, Bagayam, Vellore - 632002. Tamilnadu. South India.
Printed by Mrs. R. Shanthi, Printedat Unity Printers, Velapadi, Vellore - 632001.
Editor : Mrs. Sarah Vimal